குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி

முன்னிலை திரு.R.பூமிநாதன், B.Sc.,B.L.,

நீதித்துறை நடுவர், நான்குநேரி

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

**பட்டிகை வழக்கு எண். 415/2014**

**CNR NO: TNTL20-000670-2014**

தமிழக அரசு
மூலகரைப்பட்டி காவல்நிலைய குற்ற எண். 97/2010
காவல் உதவி ஆய்வாளர் மூலம்

...குற்றமுறையிடுனர்

/எதிர்/

1) செல்லையா, வயது 42,
த/பெ.ஆசீர்வாதம்,
வடக்குதெரு, கீழகோடான்குளம்.
2) ஜெயக்குமாரி, வயது 35,
க/பெ.செல்லையா,
வடக்குதெரு, கீழகோடான்குளம். ...குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு 14.10.2014 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை - 1 திருமதி.வனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மகேஷ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்களைப் பரிசீலனை செய்த பின்னர் இன்றுவரை நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.

## தீர்ப்பு

1. மூலகரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)- ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கில் கடந்த 02.11.2010 ம் தேதி காலை 7.00 மணிக்கு இவ்வழக்கின் சாட்சி-1 வீட்டு முன் தெருவில் நிற்கும்போது இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் முன்விரோதம் காரணமாக தேவடியா மவனே, புண்டமவனே என அசிங்கமாக ஏசி அவமானம் ஏற்படுத்தியும், 1வது எதிரி கம்பால் சாட்சி-1ன் இடது கையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், இருவரும் சேர்ந்து சாட்சி-1 ஐ மிரட்டிச் சென்ற குற்றத்திற்காக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-ன் கீழ் அரசுத் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூறினார்கள்.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 சான்றுபொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

(i) வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மாணிக்கம் தனது சாட்சியத்தில் கடந்த 12.12.2010 ம் தேதி காலை சுமார் 7.00 மணியளவில் அ.சா.1 தோட்டத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், அ.சா.1 வீட்டிற்கு செல்லும் பாதையில் 1வது எதிரி செல்லையா முள்ளை வெட்டி போட்டு வைத்திருந்ததை, அ.சா.1 முள்ளை ஏன் வெட்டி போட்டாய் என்று 1வது எதிரியை தட்டிக்கேட்டதாகவும், அதற்கு 1வது எதிரி அவதூறான வார்த்தைகளால் பேசி அப்படிதான் போடுவேன் என்று கூறி கையில் வைத்திருந்த கருவேல கம்பால் அ.சா.1ன் இடது மணிக்கட்டில்

அடித்ததாகவும், பின்னர் 2 வது எதிரி, அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசி இவனால்தான் என் குடும்பத்திற்கு கேடாக இருக்கிறது என்று கூறி மண்ணை எடுத்து வாரி அடித்ததாகவும், அ.சா.1 கை வலியால் அழுதபோது அ.சா.1 ன் மச்சான் அ.சா.2 கிறிஸ்டியன் சண்டையை விலக்கிவிட்டதாகவும், பின்னர் அ.சா.1 ன் மனைவியின் சகோதரர் அ.சா.5 பெருமாள் தன்னை ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சையில் இருந்தபோது தன்னுடன் அ.சா.1 ன் மனைவி மற்றும் பிள்ளைகள் உடனிருந்ததாகவும், பின்னர் செல்வம் என்பவர் வந்ததாகவும், புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து தன்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.8 ஆதிமூலம் தனது சாட்சியத்தில் கடந்த 02.11.2010 ஆம் தேதி உதவி ஆய்வாளர் வினோதினி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருநெல்வேலி அரசுபொதுமருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மாணிக்கம் என்பவர் அளித்த அ.சா.ஆ.4 புகார்வாக்குமூலத்தை பெற்று, அதனடிப்படையில் அ.சா.ஆ.5 முதல் தகவலறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் வினோதினி அவர்கள் விசாரணைக்கு எடுத்து கொண்டு, சம்பவ இடம் சென்று அ.சா.ஆ.6 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்தும், சாட்சிகள் மாணிக்கம், கிறிஸ்டியன், செல்வம், ஏசுவடியாள், வீரபெருமாள் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தும், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.3 காயசான்றிதழ் பெற்றும், அது ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்துகளான அ.சா.பொ.1 ஐ அ.சா.ஆ.8 அத்தாட்சி மூலம் கைப்பற்றியும், அ.சா.ஆ.9 படிவம் 91 ல் முறைப்படுத்தியும், வழக்கின் சட்டபிரிவுகளை இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) லிருந்து 294(b), 325, 506(i) ஆக பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.10 சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்தும், வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். பட்டியல் சாட்சி 9 நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தினால் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிமூலம் அ.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(iii) அ.சா.4 ஏசுவடியாள் தனது சாட்சியத்தில் சுமார் 12 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் காலை 7.00 மணியளவில் அ.சா.4 ன் வீட்டிற்கு கீழ்புறம் செல்லையா முள்ளை வெட்டி போட்டதாகவும், தோட்டத்திலிருந்து வந்த அ.சா.4 ன் கணவர்

அ.சா.1 எதிரியிடம் எதுக்கு இவ்வாறு முள்ளை வெட்டி போடுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு செல்லையா அப்படிதான் போடுவேன் என்று தேவடியாமவனே என்று திட்டி வெட்டி போட்ட முள்ளால் அ.சா.1 கையில் அடித்ததாகவும், அதனால் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், 2 வது எதிரி அ.சா.1ன் தலையில் மண்ணை அள்ளி போட்டு உன்னால்தான் இவ்வளவு பிரச்சினை என்று சொன்னதாகவும், எதிரிகள் இருவரும்சேர்ந்து இன்று தப்பித்துவிட்டாய் இன்னொரு நாள் கொன்றுவிடுவோம் என மிரட்டியதாகவும், போலிசார் விசாரணையின்போது சம்பவத்தின்போது நான் ஊரில் இருந்தேன் எனவும் சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்று கூறியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.5 வீரபெருமாள் தனது சாட்சியத்தில் கடந்த 2010 வருடம் ஒரு நாள் காலை 7.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டருகே வைத்து இடம் சம்மந்தமாக உள்ள முன்விரோதத்தில் அ.சா.1க்கும், 1வது எதிரிக்கும் இடையே சண்டை நடைபெற்றதாகவும், 1வது எதிரி, அ.சா.1ஐ முள் கம்பால் அவருடைய இடது கையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், அவருடைய வீட்டிற்கு அருகில் வசிக்கும் அ.சா.2 தன்னிடம் தெரிவித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.6 மாரிமுத்து தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள அ.சா.ஆ.2 கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், சுமார் 9 வருடத்திற்கு முன்னர் தனது மைத்துனர் அ.சா.1 அடிபட்டு வீட்டில் இருந்ததாகவும், அவரை பார்ப்பதற்காக அவர் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது அவரை அடித்ததற்கு சாட்சியாக தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.7 ஷியாம் சுந்தர்சிங் தனது சாட்சியத்தில் அ.சா.1ற்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.3 காயசான்றிதழ் வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். பட்டியல் சாட்சி 7 அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்.

**6.** அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டபட்டவர்களுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 313-(1)(b)ன் கீழ் வினவியபோது குற்றஞ்சாட்டபட்டவர்கள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று

கூறினார்கள். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதால் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

**7.** இவ்வாறான சூழ்நிலையில் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-ன் கீழான அரசு தரப்பால் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**8.** அரசு தரப்பில், எதிரிகள் அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், 1 வது எதிரி, அ.சா.1 ஐ கம்பால் அடித்து இரத்த காயம் ஏற்படுத்தியும், 1, 2 எதிரிகள், அ.சா.1 ஐ கொலைமிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்து விட்டது. எனவே 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-ன் கீழான தண்டனை வழங்க எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**9.** எதிரிகள் தரப்பில், எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. அரசுதரப்பு சாட்சிகளுக்கும், வழக்காவணங்களுக்கும் முரண்பாடு உள்ளது என்றும், சம்பவயிடம் குறித்து முரண்பாடு உள்ளது என்றும், வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள், ஆயுதங்கள் குறித்தும் முரண்பாடு உள்ளது என்றும், கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியமாகி வுள்ளார்கள். எனவே 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

**10.** இவ்வழக்கின் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை குறித்து பரிசீலனை செய்கையில், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தின் காரணமாக கடந்த 02.11.2010 ம் தேதி காலை 7 மணிக்கு அ.சா.1 தோட்டத்திற்கு போய்விட்டு வீட்டிற்கு வந்தபோது பிரச்சினைக்குரிய பொதுமுடுக்கில் போட்டு வைத்திருந்த முட்களை எடுத்து

அ.சா.1ன் வீட்டு வாசல் முன்பு போட்டுவிட்டு அந்தயிடத்தில் உரக்கிடங்கு போட்டுவிட்டதாகவும், அதை தட்டிக்கேட்ட அ.சா.1ஐ எதிரிகள் அவதூறான வார்த்தைகளால் பேசியும், 1வது எதிரி கையில் வைத்திருந்த உடைமரத்து கம்பால் அ.சா.1ன் இடது கையில் அடித்து வீக்ககாயம் ஏற்படுத்தியும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அ.சா.ஆ.4 புகார்வாக்குமூலம் மூலமாக அறியமுடிகிறது. ஆனால் அ.சா.1 முதல் விசாரணையில் கடந்த 12.12.2010 ம் தேதி காலை சுமார் 7.00 மணியளவில் அ.சா.1 தோட்டத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், அ.சா.1 வீட்டிற்கு செல்லும் பாதையில் 1வது எதிரி செல்லையா முள்ளை வெட்டி போட்டதை அ.சா.1 தட்டிக்கேட்டதாகவும், அதற்கு 1வது எதிரி, அ.சா.1ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், கருவேல கம்பால் அ.சா.1ன் இடது மணிக்கட்டில் அடித்தும், 2வது எதிரி, அ.சா.1ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், அ.சா.1ன் மீது மண்ணை எடுத்து வாரி அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி குறித்த முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. அடுத்தபடியாக, அ.சா.ஆ.4 புகார்வாக்குமூலம் மற்றும் அ.சா.1 முதல் விசாரணையில் சம்பவத்தின்போது அ.சா.1ற்கு ஏற்பட்ட காயத்திற்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது மூலகரைப்பட்டி போலிசார் ஐகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து புகார்வாக்குமூலம் வாங்கியதாகவும், அதில் அ.சா.ஆ.1 கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த பிறகு நான் காவல்நிலையம் சென்று பின்னர் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான் என்றும், காவல்நிலையத்திலும் புகார்மனு கொடுத்தேன் என்றும், பின்னர் காவலர்கள் அறிவுறுத்தலின்படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றும், மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும், கையெழுத்து எதுவும் வாங்கவில்லை என்றும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் காவல்நிலையத்தில் வைத்து தான்

கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான் என்றும், நான் கையெழுத்து போட்ட தாள் வெள்ளை தாள் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.5 குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது நேரடியாக மருத்துவமனைக்கு தான் அ.சா.1 ஐ அழைத்து சென்றேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்து புகார்வாக்குமூலம் கொடுத்த விதம் குறித்த முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. அடுத்தபடியாக, அ.சா.ஆ.4 புகார்வாக்குமூலத்தில் பிரச்சினைக்குரிய பொதுமுடுக்கில் போட்டு வைத்திருந்த முட்களை எடுத்து அ.சா.1 ன் வீட்டு முன்பு போட்டுவிட்டு அந்தயிடத்தில் எதிரிகள் உரக்கிடங்கு போட்டதாக குறிப்பிடப்பட்டுளளது. ஆனால் அ.சா.7 முதல் விசாரணை மற்றும் அ.சா.ஆ.3 காயசான்றிதழில் அ.சா.1 ஐ எதிரிகள் அவரது வீட்டில் வைத்து தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.8 குறுக்கு விசாரணையில் புகார்வாக்குமூலத்தில் பொதுமுடுக்கு சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், மாதிரி வரைபடத்தில் உரக்கிடங்கு போட்ட இடமும், சம்பவயிடமும் வெவ்வெறு இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவயிடமானது வாதியின் பழைய காரை வீட்டின் மேற்பக்கம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவயிடம் குறித்த முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அடுத்தபடியாக, அ.சா.1 முதல் விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது, அ.சா.2 சண்டையை விலக்கிவிட்டதாகவும், சம்பவத்தின்போது தன்னுடன் அ.சா.1 ன் மனைவி அ.சா.4, பிள்ளைகள் உடனிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வழக்கு சம்பவத்தின்போது அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தாங்கள் எதையும் நேரில் பார்க்கவில்லை என்றும், வழக்கு பற்றி எதுவும் தங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும்,

அ.சா.4 வழக்கு சம்பவத்தின்போது எதிரிகள் அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், 1 வது எதிரி முள்ளால் அ.சா.1 ன் கையில் அடித்தும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும், போலிசார் விசாரணையின்போது சம்பவத்தின்போது தான் ஊரில் இருந்தேன் எனவும் சம்பவத்தை கேள்விப்பட்டேன் என்று கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.4 குறுக்கு விசாரணையில் அ.சா.1 ஐ அடித்த விவரம் காலை சுமார் 8.00 மணியளவில்தான் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவத்தின்போது அ.சா.1 உடன் அ.சா.2 முதல் அ.சா.4 உடனிருந்தார்களா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

14. அடுத்தபடியாக, அ.சா.1 முதல் விசாரணையில் வழக்கு சம்பவத்தின்போது தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக அ.சா.5 மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவம் நடந்தபிறகு அ.சா.1 ஐ அ.சா.5 ன் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றதாகவும், சம்பவயிடத்திலிருந்து 1 மணி நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும், மருத்துவமனைக்கு காலை 10.00 மணியளவில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.4 குறுக்கு விசாரணையில் மருத்துவமனைக்கு காலை 8.30, 8.45 மணியளவில் சென்றேன் என்றும் அ.சா.1 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.5 குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவம் பற்றி காலை சுமார் 7.45 மணிக்கு அ.சா.1 ஐ மருத்துவமனை அழைத்து செல்வதற்காக தனக்கு தகவல் தெரிவித்தார் என்றும், சம்பவயிடத்திற்கு 8.30 மணிக்கு வந்தேன் என்றும், நேரடியாக மருத்துவமனைக்கு தான் அ.சா.1 ஐ அழைத்து சென்றேன் என்றும், எத்தனை மணிக்கு அழைத்து சென்றேன் என்று ஞாபகமில்லை என்றும், ஆனால் மருத்துவமனை அழைத்து செல்ல 1 1/4 மணி நேரம் ஆகும் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.7 ன் சாட்சியத்திலும், அ.சா.ஆ.3 காயசான்றிதழிலும் 02.11.2010 அன்று பிற்பகல் 1.15 மணியளவில் அ.சா.1 சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி

சாட்சியங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அடுத்தபடியாக, அ.சா.ஆ.4 புகார்வாக்குமூலத்தில் 1வது எதிரி அ.சா.1ஐ உடைமரத்து கம்பால் இடது கையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 முதல் விசாரணையில் வழக்கு சம்பவதின்போது 1வது எதிரி கருவேல கம்பால் அ.சா.1ன் இடது கை மணிக்கட்டில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.4 முதல் விசாரணையில் 1வது எதிரி வெட்டிபோட்ட முள்ளால் அ.சா.1ன் கையில் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.5 முதல் விசாரணையில் 1வது எதிரி அ.சா.1ஐ முள் கம்பால் அவருடைய இடது கையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.7 முதல் விசாரணை மற்றும் அ.சா.ஆ.7 காயசான்றிதழில் அ.சா.1 சிகிச்சைக்கு வரும்போது தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும், மேலும், அ.சா.1க்கு இடது முன்கை மற்றும் இடது மணிக்கட்டில் வீக்க காயம் காணப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் குறுக்கு விசாரணையில் மேற்கண்ட காயம் சொன்ன தேதிக்கு ஒரு நாள் முன்பாக ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், தடுமாறி கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள், காயங்களின் தன்மை மற்றும் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் குறித்த முரண்பாடு அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** அடுத்தபடியாக, அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலத்தில் எதிரி அவதூறான வார்த்தைகளால் பேசியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாக அறியமுடிகிறது. ஆனால் அ.சா.1 முதல் விசாரணையில் எதிரி அவதூறான வார்த்தைகளால் பேசியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருந்தாலும், அதனால் அவருக்கு அவமானமோ, மனஉளைச்சலோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 முதல்

விசாரணையில் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான *Rajendran and others vs Natchiappan*-ல் பிரிவுகள் 294(பி) மற்றும் 506(i) குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள உட்கூறுகளின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக எதிரி கள் தரப்பு எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. அடுத்தபடியாக, பார்வை மகசர் சாட்சியான அ.சா.6 முதல் விசாரணையில் பார்வைமகசரில் உள்ள அ.சா.ஆ.2 கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், சுமார் 9 வருடத்திற்கு முன்னர் தனது மைத்துனர் அ.சா.1 அடிபட்டு வீட்டில் இருந்ததாகவும், அவரை பார்ப்பதற்காக அவர் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது அவரை அடித்ததற்கு சாட்சியாக தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் குறுக்கு விசாரணையில் மாரிமுத்து வீட்டிற்கு காலை 9.00 மணியிலிருந்து 9.30 மணிக்குள் சென்றதாகவும், போலிசார் கையெழுத்து வாங்கும்போது தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், போலிசார் கேட்டார்கள் தனது மைத்துனருக்கு அடிபட்டு இருந்தது, அதனால் கையெழுத்து செய்தேன் என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான ராஜ்குமார் என்பவரை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யாமல் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளதை பார்க்கும்பொழுது அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் புலன் விசாரணை அதிகாரியால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதுதான் என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. அடுத்தப்படியாக, அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே வீட்டு முடுக்கு சம்மந்தமாக பிரச்சினை உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே,

அ.சா.1, எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. இறுதியாக, அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(i)-இன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i)-இன் கீழ் சுமத்திய குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியதால் சந்தேகத்தில் பலனை எதிரிகளுக்கு அளித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரங்களை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரிகள் நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் கு.வி.மு.ச.437 A-ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

21. இவ்வழக்கின் வழக்கு சொத்து எண்.242/2014-ல் கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 சுமார் 75 செ.மீ நீளமும், சுமார் 14 செ.மீ சுற்றளவும் உள்ள சீமைக்கருவைக் கம்பு ஒன்றை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது..

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமையாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.16 17:43:07 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திரு.மாணிக்கம் (புகார்தாரர்)

அ.சா.2 திரு.கிறிஸ்டியன் (கண்ணுற்ற சாட்சி)

அ.சா.3 திரு.செல்லம் (கண்ணுற்ற சாட்சி)

அ.சா.4 திருமதி.ஏசுவடியாள் (கேள்விநிலை சாட்சி)

அ.சா.5 திரு.வீரபெருமாள் (கேள்விநிலை சாட்சி)

அ.சா.6 திரு.மாரிமுத்து (பார்வைமகசர் சாட்சி)

அ.சா.7 திரு.ஷியாம் சுந்தர்சிங் (மருத்துவர்)

அ.சா.8 திரு.ஆதிமூலம் ( சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 02.11.2010 தேதியிட்ட புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து

அ.சா.ஆ.2 02.11.2010 தேதியிட்ட பார்வைமகசரில் உள்ள அ.சா.6 ன் கையெழுத்து

அ.சா.ஆ.3 01.12.2010 தேதியிட்ட அ.சா.1 ன் காயச்சான்றிதழ்

அ.சா.ஆ.4 02.11.2010 தேதியிட்ட புகார்வாக்குமூலம்

அ.சா.ஆ.5 02.11.2010 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.6 02.11.2010 தேதியிட்ட பார்வை மகசர்

அ.சா.ஆ.7 02.11.2010 தேதியிட்டமாதிரி வரைபடம்

அ.சா.ஆ.8 02.11.2010 தேதியிட்ட அத்தாட்சி

அ.சா.ஆ.9 02.11.2010 தேதியிட்ட படிவம் 91

அ.சா.ஆ.10 21.01.2011 தேதியிட்ட சட்டபிரிவு மாறுதல் அறிக்கை

**அரசுத் தரப்பு சான்று பொருள்** :

அ.சா.பொ.1 சுமார் 75 செ.மீ நீளமும், சுமார் 14 செ.மீ சுற்றளவும் உள்ள சீமைக்கருவைக் கம்பு ஒன்று.

**குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றவாணம்**

இல்லை

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.16 17:43:16 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**Particulars under rule 106 of Criminal Rules of Prcatice-2019**
**Judicial Magistrate Court, Nanguneri**
**CC.415/2014**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Police Station and the Crime Number of the Offence | Moolakaraipatty PS., Cr.No.97/2010 |
| 2. | Name, Age, Father Name | 1) Chellaiah, S/o.Asirvatham<br>2) Jeyakumari, W/o Chellaiah |
| 3. | Occupation | Cooli |
| 4. | Residence | Keela Kadankulam |
| 5. | Occurrence | 02.11.2010 |
| 6. | Complaint | 02.11.2010 |
| 7. | Apprehension | A1 & A2 – 03.11.2010 |
| 8. | Release on Bail | A1 & A2 – 08.11.2010 |
| 9. | Commitment | - |
| 10. | Commencement of Trial | 03.06.2022 |
| 11. | Closure of Trial | 07.03.2026 |
| 12. | Sentence or Order | 16.03.2026 |
| 13. | Service of copy of Judgment of finding on accused | - |
| 14. | Explanation of delay | - |

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.16 17:43:23 +0530

Judicial Magistrate,
Nanguneri.